# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2016 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க,*
## பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

---

*(2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2016, ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *10.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

**2016 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்**

[2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. 35/2013

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 75 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 75 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-

"ஆசிரியர்கள் தவிர்ந்த ஆட்களின் ஓய்வுபெறுகை.

75. (1) காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறான பகிரங்க அலுவலரொருவரின் ஓய்வூதிய வயது ஆசிரியர் பதவி தவிர்ந்த ஏதேனும் பதவியை வகிப்பவரின் ஓய்வூதிய வயது தொடர்பில் பகிரங்க அலுவலரொருவருக்கு ஏற்புடையதான அதே திகதியிலிருந்து பயனுறும் வகையில் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) (அ) ஆணைக்குழு அல்லது அத்தகைய ஏதேனும் பதவியை வகிப்பவர் எந்த உயர்கல்வி நிறுவனத்தைச் சேர்ந்துள்ளாரோ அந்த ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் ஆளுகின்ற அதிகார சபை அல்லது அத்தகைய ஆள் உயர்கல்வி நிறுவகமொன்றைச் சேர்ந்தவராகவிருக்கும் விடயத்தில், அத்தகைய நிறுவகம் எந்த உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்துள்ளதோ அந்த உயர்கல்வி நிறுவனத்தின்

2-PL 010093 -961 (2016/07)

ஆளுகின்ற அதிகாரசபை, துர்நடத்தை, வினைத்திறனின்மை அல்லது கடமையிலான தவறுகை என்பவற்றுக்காக, ஆணைக்குழுவினாலான அல்லது நிறுவகத்தின் அத்தகைய ஆளுகின்ற அதிகாரசபையினாலான ஒரு விசாரணை முடிவுறாதிருக்கையில் அத்தகைய பதவியை வகிப்பவரை நிறுவகத்தின் விதப்புரைகளின் அடிப்படையின் மீது இடைநிறுத்தலாம் ; அல்லது

(ஆ) அத்தகைய பதவிவகிப்பவர் அத்தகைய விசாரணையின் பின்னர் குற்றவாளியாக காணப்படுமிடத்து, அத்தகைய ஆள் எந்த உயர்கல்வி நிறுவகத்தைச் சேர்ந்துள்ளாரோ அந்த உயர்கல்வி நிறுவகத்தின் அல்லது அத்தகைய ஆள் ஓர் உயர்கல்வி நிறுவனத்தை சேர்ந்துள்ளவராக இருக்கும் விடயத்தில் அத்தகைய நிறுவகம் எந்த உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்துள்ளதோ அந்த உயர்கல்வி நிறுவனத்தின் ஆளுகின்ற அதிகாரசபை விடயத்துக்கேற்ப ஆணைக்குழு, உயர்கல்வி நிறுவகத்தின் ஆளும் அதிகாரசபை என்பன ஆணைக்குழுவால் அல்லது இயைபான உயர்கல்வி நிறுவகத்தின் ஆளும் அதிகாரசபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது அத்தகைய பதவிவகிப்பவர் நீக்கப்படலாம் அல்லது அவரை வலுக்கட்டாயமாக ஓய்வு பெறச் செய்யலாம்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவு, “ஆளுகின்ற அதிகாரசபை” என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"உயர்கல்வி நிறுவகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 24ஆ என்னும் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட உயர்கற்கைக்கான ஒரு நிறுவகம் என்று பொருளாகும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*